மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவைகுண்டம்

2026 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 05-ம் நாள் வியாழக்கிழமை

அ.வ.எண். 10/22

வா.சா.1

சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டின் ஆணையுறுதி சட்டத்தின் வகைமுறைகளின் கீழ் (44 வது சட்டம்) திரு.எம்.ஹரிராமகிருஷ்ணன்,M.A.,M.Phil.,L.L.M., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதிகூறி வைக்கப்படுகிறது.

---

| | |
|---|---|
| பெயர்: குணசேகர் | தேதி : 05.02.26 |
| வயது : | த/பெ :சிவன் ஆறுமுகம் |
| கிராமம் : | தொழில் : |
| | மாவட்டம்: |

---

<u>05.02.26 முதல் விசாரணை தொடர்ச்சி</u>

நான் இவ்வழக்கில் வா.சா 1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளேன். எனது தரப்பு கூடுதல் முதல் விசாரணை வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். பிராது படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

2.16.07.1956 ம் தேதி தபசில் சொத்தை என் தந்தை சிவன் ஆறுமுக நாடார் பொன்னையா நாடார் என்ற சுப்பையா நாடாரிடம் இருந்து கிரையம் வாங்கிய ஆவணத்தின் அசலினை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ 1 ஆகும். தபசில் சொத்தை பொறுத்து எங்கள் பெயரிலும், வேறு நபர்கள் பெயரிலும் உள்ள கூட்டு பட்டாவின் கணிணி நகலினை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ 2 ஆகும். 05.10.2021 ம் தேதி தபசில் சொத்திற்கு என் தந்தை சிவன் ஆறுமுக நாடார் பெயரில் உள்ள தீர்வை ரசீதின் அசலினை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ 3 ஆகும்.

HARIRAMAKRISHNAN

Digitally signed by HARIRAMAKRIS
Date: 2026.02.0
20:11:45 +0530

3.11.08.2003ம் தேதியில் எனது சகோதரர் தனசேகரன் இறந்துவிட்டார் என்பதற்கான இறப்பு சான்றின் இணையவழி நகலினை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ 4 ஆகும். 16.07.2018 என் சகோதரர் தனசேகருக்கு வழங்கப்பட்ட வாரிசு சான்றின் உண்மை நகலினை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ 5 ஆகும்.

4.நீதிமன்ற ஆணையர் அறிக்கை நீ.ம.சா.ஆ 1 ஆகும். ஆணையர் வரைபடம் நீ.ம.சா.ஆ 2 ஆகும். ஆணையர் தாக்கல் செய்துள்ள சர்வேயர் வரைபடம் நீ.ம.சா.ஆ 3 ஆகும்.

## குறுக்கு விசாரணை

பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.02.05 20:11:50 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி ,
ஸ்ரீவைகுண்டம்.